# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **058,066,067& 068/ந/2018**

ஆணை எண். **82/2018**

நாள் : **28/03/2018**

**திருமதி பி. சரஸ்வதி,**
**மேட்டூர் –636 304.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**இடைப்பாடி நகராட்சி,**
**இடைப்பாடி.** – **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி, குஞ்சாண்டியூர், 1/7–24 D, ஊர் கவுண்டர் தெரு, முகவரியில் வசிக்கும் திருமதி P. சரஸ்வதி அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனுக்கள், இம்முறைமன்ற நடுவத்தில் 058,066,067 &068 / 2018 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டுக், கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி, குஞ்சாண்டியூர், 1/7–24 D, ஊர் கவுண்டர் தெரு, முகவரியில் வசிக்கும் திருமதி P. சரஸ்வதி என்பவர், இடைப்பாடி நகராட்சியில் உதவியாளராகப் பணியாற்றி, 30.04.2007 அன்று ஓய்வு பெற்ற காலஞ்சென்ற தனது கணவர் திரு P. பழனியப்பன், கீழ்க்காணும் நகராட்சிகளில் பணியாற்றிய விவரங்களைக் குறிப்பிட்டு, அவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

| வ. எண். | நகராட்சிகளின் பெயர் | பணியின் தன்மை | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி | இளநிலை உதவியாளர் | 20.11.1970 – 16.07.1976 |
| | | | 11.04.1978 – 22.08.1980 |
| | | | 30.09.1980 – 30.09.1990 |
| | | | 16.05.1997 – 25.03.1998 |
| 2. | கோபி செட்டிபாளையம் | இளநிலை உதவியாளர் | 17.07.1976 – 10.04.1978 |
| | | | 23.08.1980 – 29.09.1980 |
| 3. | ஈரோடு நகராட்சி | இளநிலை உதவியாளர் | 01.10.1990 – 15.05.1997 |
| 4. | இடைப்பாடி நகராட்சி | உதவியாளர் | 2004 - 2007 வரை |

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப்

படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் **இடைப்பாடி நகராட்சி ஆணையருக்கு** மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுவதுடன், மேலும் விவரங்களுக்கு நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் / பெறப்பட்ட மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, அவரது பணி விவரங்களை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களிடம் உறுதி செய்வதுடன் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று, சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி **இடைப்பாடி நகராட்சி ஆணையருக்கு** அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி பி. சரஸ்வதி,
எண்.1 / 7–24 டி, ஊர் கவுண்டர் தெரு,
குஞ்சாண்டியூர் அஞ்சல், மேட்டூர் – 636 304.

2. நகராட்சி ஆணையர்,
இடைப்பாடி நகராட்சி,
இடைப்பாடி, சேலம் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி, மேட்டூர், சேலம் மாவட்டம்.

4. நகராட்சி ஆணையர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி,
கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.

5. மாநகராட்சி ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

6. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,
சேலம், சேலம் மாவட்டம்.

7. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,
திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.

8. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி